ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2162/64 - 2020 පෙබරවාරි මස 14 වැනි සිකුරාදා - 2020.02.14

*2162/64 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதியுத்தமராம் சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களினால்**

(முத்திரை)

கோட்டாபய ராஜபக்ஷ.

**சனாதிபதி உத்தரவு**

அரசாங்கம் மற்றும் தனியார்துறையின் சம்பளம் உட்பட கொடுப்பனவுகளின் நிலைபேறான தன்மையினைத் தொடர்ந்தும் பேணுவதற்காக அப்பிரிவுகளின் சம்பளம், கொடுப்பனவுகள் உள்ளிட்ட அனைத்து ஊதிய கட்டமைப்பினை மீளாய்வுக்குட்படுத்தி முழு அரசதுறையைப் போன்று தனியார் துறையினதும் ஊழிய அணியின் தேவைகளைப் பொருத்தமான முறையில் நிவர்த்தி செய்வதற்கு வசதிகள் வழங்குவதற்காக தேசிய சம்பளக் கொள்கையினை தயாரித்தல் மற்றும் அதனை அமுல்படுத்துவதற்காக அரசாங்கத்திற்கு ஆலோசனைகள் வழங்குதல் மற்றும் உதவிகளை வழங்கும் வகையில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 33ஆவது உறுப்புரைக்கு அமைய அதிமேன்மை தங்கிய சனாதிபதியினால் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை அமுல்படுத்தும் வகையில் விசேட முகவர் நிறுவனத்தை தாபித்தல்.

1. திரு.உப்பாலி விஜேவீர அவர்கள்
2. திருமதி சந்திராணி சேனாரத்ன அவர்கள்
3. திரு.கோட்டாபய ஜயரத்ன அவர்கள்
4. திருமதி சுஜாத்தா குரே அவர்கள்
5. திருமதி மதுரா வேஹெல்ல அவர்கள்
6. திரு.எம்.எஸ்.டி.ரணசிறி அவர்கள்
7. வைத்தியர் ஆனந்த ஹப்புகொட அவர்கள்
8. திரு.சஞ்ஜீவ சோமரத்ன அவர்கள், மேல் நீதிமன்ற நீதிபதி
9. திரு.அஜித் நயனகாந்த அவர்கள்
10. திரு.ரவி லியனகே அவர்கள்

1A - G 32042 — 392 (2020/02)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

11. திரு.சனத் எதிரிவீர அவர்கள்
12. கலாநிதி ரஞ்சித் சேனாரத்ன அவர்கள்
13. பொறியியலாளர் ஆர்.எம்.அமரசேக்கர அவர்கள்
14. மேஜர் ஜெனரல் (ஓய்வு) சிறி ரணவீர அவர்கள்
15. திரு.டளிள்யூ.எச்.பியதாச அவர்கள்

இற்கு,

வாழ்த்துக்கள் !

"நாட்டைக் கட்டியெழுப்பும் சௌபாக்கிய நோக்கு" என்ற அரசாங்கக் கொள்கைப் பிரகடனத்திற்குரியதாக மக்களுக்கு பொருத்தமான அரச சேவைக்காக அரச சேவையின் வினைத்திறன் மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்காக சேவையின் தேவைக்கமைய கட்டமைக்கப்பட்ட மானிடவளத்தைப் பயன்படுத்தும் நீண்டகால திட்டங்களை வகுப்பதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ளமையினாலும் அரசாங்கத்தினால் திட்டமிடப்பட்டுள்ள அபிவிருத்தி இலக்குகள் மற்றும் அபிலாசைகளை எட்டுவதற்கான செயற்பாடுகளின் போது தனியார்துறையினதும் செயற்பாட்டு பங்களிப்புக்கள் குறித்து கருத்திற்கொண்டு அரச சேவையினை வினைத்திறனுடன் வழங்குவதற்கும், அபிவிருத்திச் செயற்பாடுகளை இலகுபடுத்துவதற்கும் தேவையான சந்தர்ப்பங்களில் மேற்பார்வை செய்வதற்கும் செயற்பாடுகளை உற்பத்தித் திறனுடன் முன்னெடுக்கக் கூடிய தேர்ச்சிமிக்க ஊழியர் அணியை அரச சேவைக்கு சேர்த்துக் கொண்டு உற்பத்தித் திறன்மிக்க அரச சேவையினை முன்னெடுக்கக் கூடிய வகையில் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் உட்பட பல்வேறுபட்ட ஊக்குவிப்புக்கள் உள்ளடங்கலான யோசனைத் திட்டத்தை அறிமுகப்படுத்துவது அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு என்பதனாலும்,

மேலும், மானிட வளத்தை அந்தந்தத் துறைகள் மீது ஈடுபடுத்தும் போது பொருளாதார ரீதியில் இடம்பெறக் கூடியதாக காணப்படும் கட்டமைப்பு மாற்றங்கள் குறித்து கருத்திற் கொள்ளுவதும் சர்வதேச ரீதியில் ஊழிய அணியின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதன் மூலம் ஊழிய செலவினத்தை இலங்கைக்கு பயன்மிக்கதாக போட்டிகரமான மட்டத்திற்கு முன்கொண்டு செல்வதும் அவசியமென தென்படுவதனாலும்,

மேலும், ஊழிய அணியின் தேவையை நிவர்த்திச் செய்யும் போது முழுமையான அரச துறை மற்றும் தனியார்துறைக்கிடையிலும், அரச துறையிலும் பல்வேறுபட்ட நிறுவனங்களுக்கிடையிலும் பாதிப்பு மிகுந்த போட்டிகரமான நிலைமைகள் உருவாகுவதை தடுப்பதற்கும் ஒவ்வொரு பிரிவுக்கு ஏற்றவகையில் பணியாற்ற எதிர்பார்க்கப்படுவதனாலும்,

மேலும், பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடுகளில் அரசுதுறைக்குரிய செயற்பாட்டுப் பணிகளை வினைத்திறனுடன் முன்னெடுப்பதற்காக விசேட தேர்ச்சிமிக்க தொழில்சார் ஆளணியை அரசதுறை மீது கவர்ச்சிக்குட்படுத்துவதற்கு தற்போதைய முறையில் சிரமமாக இருப்பதனால் அதற்காக பொருத்தமான விசேட முறைகளை அறிமுகப்படுத்த வேண்டியதன் தேவை அரசாங்கத்திற்கு இருப்பதனாலும்,

மேலும், முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் முன்னெடுக்க வேண்டிய செயற்பாடுகளை மீளாய்வுக்குட்படுத்தி பல்வேறுபட்ட சேவைகளுக்காக தேவையான ஊழியர் எண்ணிக்கை தொடர்பாக மீளக் கண்டறிந்து புதிதாகப் பதவிகளை உருவாக்கும் போது மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் அணிக்குள் ஊழியர்களை சேவையின் தேவைக்காக பயன்மிக்கதான முறையில் ஈடுபடுத்தும் போது தேவையான சந்தர்ப்பங்களில் ஆலோசனைகள் அல்லது வழிகாட்டல்களை வழங்கும் தேவையிருப்பதனாலும்,

மேலும், அரச சேவையில் ஊழியர்கள் அவர்கள் மேற்கொள்ளும் கடமைகளின் தரத்தை அதிகரிக்கும் வகையில் ஈடுபடுத்துவதற்கும் மற்றும் தொடர்ச்சியான பயிற்சி மற்றும் ஆற்றல் அபிவிருத்தியை மேம்படுத்தல் தொடர்பாக அரசு முன்னுரிமை வழங்கும் என்பதாலும்,

மேலும், "சௌபாக்கியமிக்க நோக்கு" என்ற அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அரச துறையைப் போன்று தனியார் துறையிலும் வேலைவாய்ப்பு பெற்றுள்ளோரின் சுபீட்சத்துக்கான கொள்கைகளை அமுல்படுத்த அரசாங்கத்திற்கு பொறுப்பு இருப்பதனாலும்,

மேற்கூறப்பட்ட நோக்கங்களை எட்டுவதற்காக இதற்குப் பின்னர் கீழ்க்குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பாக, அதாவது :

(அ) கீழ்க்குறிப்பிடப்பட்ட விடயங்களைக் கருத்திற்கொண்டு மாகாண அரச சேவை மற்றும் ஆயுதப்படை சேவைகள் உட்பட அரச சேவையும், திரண்ட நிதியத்தின் மூலம் சம்பளம் செலுத்தப்படும் விசேட நிறுவனங்களும், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நிலையியற் சபைகள், அரசாங்கத்துக்குச் சொந்தமான கம்பனிகள், அரச தொழில்

முயற்சிகள், இலங்கை மத்திய வங்கி உட்பட அரச வங்கிகள் மற்றும் ஏனைய நிதி நிறுவனங்களும் மேற்பார்வை நிறுவனங்கள் உட்பட முழுமையாக அரச துறையின் அனைத்து துறைகளினதும் சம்பளம், கொடுப்பனவுகள் உட்பட நிதிசார்ந்த ஊதியம் மற்றும் நிதிசாராத ஏனைய பல்வேறுபட்ட வசதிகளையும் தொடர்ச்சியாக மீளாய்வுக்குட்படுத்துவதனை அடிப்படையாகக் கொண்டு மேற்கூறப்பட்ட நோக்கங்களை எட்டுவதற்காக வழிவகுக்கக் கூடிய தேசிய சம்பளம் மற்றும் கொடுப்பனவு கொள்கைத் தொடர்பாக அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்;

(i) அரசாங்கத்தின் சமூகப் பொருளாதார கொள்கைகளை மிகவும் அர்த்தபூர்வமாக அமுல்படுத்துவதற்காக தற்போது மற்றும் எதிர்வரும் காலங்களில் அரச சேவைக்குத் தேவைப்படும் முகாமைத்துவம், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப துறைகளில் நிபுணத்துவ அறிவு கொண்ட தேர்ச்சிமிக்கோரை அரச துறையின் உரிய துறைகள் மீது கவர்ந்திழுக்கும் வகையில் வேலை வாய்ப்பு நிலைமையில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்கள்;

(ii) இதற்கு முன்னர் நியமிக்கப்பட்ட சம்பள ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கமைய அல்லது அவ்வவ் சந்தர்ப்பங்களில் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு மேற்கொள்ளப்பட்ட அல்லது சம்பள அதிகரிப்புகள் காரணமாக உருவான தற்போது காணப்படும் சம்பள முரண்பாடுகளை திருத்தி அமைக்கும் தேவையையும்;

(iii) அரச துறையைப் போன்று தனியார் துறையிலும் வேலையில் ஈடுபட்டுள்ளோரை திருப்தியடைந்தவர்களாகவும், ஊக்குவிக்கப்பட்டவர்களாகவும் தேவையான தேர்ச்சி உடையவர்களாக மாற்றியமைக்க வேண்டிய தேவையையும்;

(iv) அதி உயரிய உற்பத்தித் திறன் மற்றும் வினைத்திறனைப் பெற்றுக் கொள்வதற்கு அரச சேவையினைச் செயற்படுத்தும் தேவையைப் போன்று தனியார் துறையின் ஊழிய அணித்தேவையை நிவர்த்திச் செய்வதற்காக காணப்படும் தடைகளை நீக்குவதன் தேவையையும்;

(v) அரசாங்கத்தின் மீண்டெழும் செலவினம் அதியுயரிய மட்டத்தில் காணப்படுவதைப் போன்று அரச முதலீட்டுச் செலவினம் குறைந்த மட்டத்தில் இருப்பதனாலும் அரச செலவினங்களில் பண்புசார் தரத்தை மேம்படுத்தும் தேவையினைக் கருத்திற் கொண்டு சமர்ப்பிக்கப்படும் யோசனைகள் அரசாங்கத்தின் நிதி எல்லைகளுக்குள் அமுல்படுத்த முடியும் என்றும்;

(ஆ) தற்போது அமுலில் உள்ள சம்பளம் மற்றும் கொடுப்பனவு, ஊழியர் எண்ணிக்கை, சேவையின் தரங்கள், ஆட்சேர்ப்பு ஒழுங்குவிதி முறைகள், பதவி உயர்வு ஒழுங்கு முறைகள் மற்றும் சேவைப் பிரமாணக் குறிப்பு சார்ந்ததாக எழக்கூடிய பிரச்சினைகளைப் போன்று இடைக்கிடையே மேற்கொள்ளப்படும் சம்பள அதிகரிப்புக் காரணமாகவும் தற்போது எழுந்தள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ள முரண்பாடுகளைக் கட்டுப்படுத்தும் வகையில் அரசாங்கத்திற்கு யோசனைகளை சமர்ப்பித்தல்;

(இ) சமமான பொறுப்புக்களை வகிப்போர் அல்லது சமமான தகைமைகளைக் கொண்டோர் அல்லது தொழிலாளர்களினால் அரச மற்றும் அரச சார்புடைய நிறுவனங்களிலிருந்து பெற்றுக் கொள்ளும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் உட்பட ஊக்குவிப்பு கொடுப்பனவுகளுக்கிடையில் முரண்பாடுகளிருப்பின் அவற்றைக் கட்டுப்படுத்தும் வகையில் வழிகாட்டல்களை சம்பளம் மற்றும் கொடுப்பனவு கட்டமைப்பு தொடர்பாக அரசாங்கத்திற்கு யோசனைகளைச் சமர்ப்பித்தல்;

(ஈ) ஒரு சில அரசாங்க நிறுவனங்களினால் தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள பணிக்கொடை கொடுப்பனவுகள் உள்ளிட்ட பல்வேறுபட்ட ஊக்குவிப்பு முறைகள் மற்றும் வழங்கல் முறைகளை மீளாய்வுக்குட்படுத்தி பணிக்கொடை கொடுப்பனவு, பல்வேறுபட்ட ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் மற்றும் நிதி சாராத ஊக்குவிப்புக்களை வழங்குவது தொடர்பில் தீர்மானிப்பதற்காக மிகவும் பொருத்தமான முறைகளை பரிந்துரை செய்தல்;

(உ) அரச சேவையில் ஊதியங்கள் தொடர்பில் அரசாங்கத்தினால் வெளியிடப்படும் சம்பள மறுசீரமைப்புக்கள் அல்லது கொள்கைத் தீர்மானங்களுக்கமைய எந்தவொரு அரச நிறுவனம் அல்லது நிறுவனங்களின் உதவிகளைப் பெற்று தேவையானவாறு அரச சேவையின் சேவைப் பிரமாணக்குறிப்பு, ஆட்சேர்ப்பு ஒழுங்கு விதிமுறைகள், பதவியுயர்வு ஒழுங்குவிதிமுறைகளை மறுசீரமைப்பது அல்லது சீர்திருத்துதல் தொடர்பில் சம்பந்தப்பட்ட பொறுப்பாளர்களுக்கு பரிந்துரைகளை சமர்ப்பித்தல்;

(ஊ) அரச துறையின் சம்பளம் மற்றும் சேவை நிபந்தனைகள் தொடர்பில் உருவாகக் கூடிய பிணக்குகளை துரிதகதியில் தீர்க்கும் நோக்குடன் அப்பிணக்குகளைத் தீர்ப்பதற்குத் தேவையான தீர்வுகளைச் சமர்ப்பிப்பதற்காக அதிகாரம் கொண்ட நிறுவனம் (பிணக்கு தீர்க்கும் சபை) தாபிப்பது தொடர்பில் இரண்டாயிரமாம் ஆண்டு யூலை மாதம் 20 ஆந்

திகதி நியமிக்கப்பட்ட சம்பள ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட யோசனைகளை அமுல்படுத்துவதனை தொடர்ந்தும் ஆராய்ந்து சம்பளம் மற்றும் கொடுப்பனவு அல்லது அது சார்ந்த கருத்து முரண்பாடுகள் தொடர்பிலும் ஆட்சேர்ப்பு ஒழுங்குவிதிமுறைகள், பதவி ஒழுங்குவிதிமுறைகள் அல்லது சேவைப் பிரமாணக் குறிப்பு சார்ந்ததான கருத்து முரண்பாடுகள் தொடர்பில் பிணக்குகளைத் தீர்ப்பவராகச் செயற்படுதல் மற்றும் அவற்றைத் தீர்க்கும் தாபன முறைமைக்காக பரிந்துரைகளைச் சமர்ப்பித்தல்;

(எ) அரச சேவையில் மிகுந்த யதார்த்த பூர்வமான மற்றும் மக்களை கேந்திரமாகக் கொண்ட பொருளாதாரத்திற்குத் தேவையான சேவை வழங்களைக் கருத்திற் கொண்டு முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் அரச துறைக்காக பதவிகளை உருவாக்குதல் மற்றும் பதவிகள் முறையாக பகிர்ந்து செல்லும் வகையில் பின்பற்ற வேண்டிய செயற்பாடுகளை பரிந்துரை செய்தல்;

(ஏ) அரச சேவையின் நிரந்தரப் பதவி வகிக்கும் தொழில்சார் தகைமைகள் மற்றும் திறமை மிக்க உத்தியோகத்தர்களை அரச சார்புடைய மற்றும் தனியார் நிறுவனங்களில் அல்லது வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களில் இணைவதும் அதன் மூலம் அரச சேவையை விட்டு விலகுவதை தவிர்க்கும் வகையில் தேவையான கொள்கைகளுக்காக அரசாங்கத்திற்கு பரிந்துரைகளைச் சமர்ப்பித்தல்;

(ஐ) எதிர்பார்க்கப்பட்ட ஆயுட்காலம் அதிகரிப்பதனால், காணப்படும் சனத்தொகையின் சுகாதார நிலைமைகளைப் போன்று சர்வதேச முன்னேற்றங்களைக் கருத்திற் கொண்டு அரச மற்றும் தனியார் துறையில் விரிவான மீளாய்வுகளை மேற்கொண்டு எதிர்வரும் தசாப்தங்களுக்கு பொருத்தமான கட்டாய ஓய்வு பெறும் வயதெல்லை மற்றும் ஊழியர்களின் உடல் உள சுகாதார நிலைமைகளைப் போன்று உற்பத்தித் திறன் மிக்க பங்களிப்புகள் தொடர்பில் பரிந்துரைகளைச் சமர்ப்பித்தல் ;

(ஒ) தனியார் துறையின் ஊழியர்களுக்காக உரிய குறைந்தபட்ச சம்பளம், தொழில் பாதுகாப்பு மற்றும் அவர்களுக்கு உரித்தாகக் கூடிய அத்தியாவசிய நலன்புரி வசதிகள் கிடைக்கப் பெறுவதை உறுதிப்படுத்துவதற்கும் தனியார் துறையின் உற்பத்தித் திறனை உறுதிப்படுத்தி தேசிய பொருளாதாரத்தை பலப்படுத்துவதைப் போன்று ஊழியர்களின் சுபீட்சத்துக்காக, சௌபாக்கியமிக்க நோக்கு கொண்ட கொள்கைப் பிரகடனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள அரசாங்கத்தின் கொள்கையினை அமுல்படுத்துவது தொடர்பாகவும் அரசாங்கத்திற்கு பரிந்துரைகளைச் சமர்ப்பித்தல்;

(ஓ) நாட்டின் ஊழிய வளம் அரச துறை மற்றும் தனியார் துறையினால் நாட்டின் அபிவிருத்திக்காக அதிசிறந்த மட்டத்தில் பயன்படுத்துவதற்கு உரியதான முறையில் தேசிய சம்பளக் கொள்கை கோட்பாட்டுக்காக அரசாங்கத்திற்கு யோசனைகளைச் சமர்ப்பித்தல்;

ஆகிய விடயங்கள் தொடர்பாக அரசாங்கத்திற்கு ஆலோசனைகள் வழங்குதல் மற்றும் உதவும் வகையில் தேசிய சம்பள ஆணைக்குழு (இதற்குப் பின்னர் ஆணைக்குழு என அறிமுகப்படுத்தப்படும்) தாபிப்பது அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு என்பதனாலும்,

மேலே இனங்காணப்பட்டுள்ளவாறு தற்போதைய ஆணைக்குழுவிற்கு பொறுப்பளிக்கப்படும் பணிகள் மற்றும் கடமைகளை நிவர்த்தி செய்வதனை பொதுமக்களின் நலனுக்காக உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டுமென்பது எனது யோசனை என்பதனாலும்,

சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய நான் மேற்கூறப்பட்ட பணிகள் மற்றும் பொறுப்புக்களை பொறுப்பேற்று முன்னெடுக்கும் வகையில் தேசிய சம்பள ஆணைக்குழுவை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் 33 ஆம் சரத்தின் ஒழுங்கு விதிமுறைகளுக்கமைய இத்தால் தாபிக்கின்றேன்.

மேலும், உங்களின் திறன், அடைவு மட்டங்கள், நம்பகத் தன்மை தொடர்பில் கூடுதலாக நம்பிக்கையுடன் செயற்பட இதன் மூலம் மேற்கூறப்பட்ட,

1. திரு.உப்பாலி விஜேவீர அவர்கள்
2. திருமதி சந்திராணி சேனாரத்ன அவர்கள்
3. திரு.கோட்டாபய ஜயரத்ன அவர்கள்
4. திருமதி சுஜாத்தா குரே அவர்கள்
5. திருமதி மதுரா வேஹெல்ல அவர்கள்
6. திரு.எம்.எஸ்.டி.ரணசிறி அவர்கள்
7. வைத்தியர் ஆனந்த ஹப்புகொட அவர்கள்

8. திரு. சஞ்ஜீவ சோமரத்ன அவர்கள், மேல் நீதிமன்ற நீதிபதி
9. திரு. அஜித் நயனகாந்த அவர்கள்
10. திரு. ரவி லியனகே அவர்கள்
11. திரு. சனத் எதிரிவீர அவர்கள்
12. கலாநிதி ரஞ்சித் சேனாரத்ன அவர்கள்
13. பொறியியலாளர் ஆர்.எம்.அமரசேக்கர அவர்கள்
14. மேஜர் ஜெனரல் (ஓய்வு) சிறி ரணவீர அவர்கள்
15. திரு. டபிள்யூ. எச்.பியதாச அவர்கள்

ஆகிய நீங்கள் தேசிய சம்பள ஆணைக்குழுவின் அங்கத்தவர்களாக இத்தால் என்னால் நியமிக்கப்படுவதுடன், மேற்கூறப்பட்ட (அ) தொடக்கம் (ஓ) வரையான பணிகளை அமுல்படுத்தவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறும் நான் தங்களுக்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

மேலும், திரு.உப்பாலி விஜேவீர அவர்களை இவ் ஆணைக்குழுவின் தலைவராகவும், திருமதி சந்திராணி சேனாரத்ன அவர்களை இவ் ஆணைக்குழுவின் செயலாளராகவும் நான் தொடர்ந்தும் இத்தால் நியமிக்கின்றேன்.

மேலும், இதன் மூலம் பணிக்கப்படும் பணிகளை மேற்கொள்வதற்குரியதாக தேவையானது எனக் கருதக் கூடியவாறு பரிசோதனைகளை மேற்கொள்ளல் மற்றும் உரிய விடயங்களை ஆய்வுக்குட்படுத்தும் வகையில் ஆலோசனைகளை வழங்க ஆணைக்குழுவிற்கு நான் இத்தால் அதிகாரங்களை வழங்குகிறேன்.

மேலும், அரச துறையின் விசேட துறைகள் தொடர்பில் மற்றும் தனியார் துறைகள் தொடர்பில் அவ்ஆணைக்குழுவின் தலைவருக்கு மற்றும் அங்கத்துவ சபைக்கு தேவையான சந்தர்ப்பங்களில் உதவிகளை வழங்கும் வகையில் உரிய பணிகளுக்கு வரையறுக்கக் கூடிய வகையில் அந்தந்தத் துறைகளில் நிபுணத்துவ அறிவு மற்றும் அனுபவம் கொண்ட மூன்று உத்தியோகத்தர்களை உள்ளடக்கியதாக துணைக் குழுவை நியமிப்பதற்கு ஆணைக்குழுவிற்கு இத்தால் அதிகாரத்தை வழங்குகின்றேன்.

ஆணைக்குழுவினால் ஆலோசனைகள் வழங்கக் கூடிய வகையில் இன்றேல் தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் வகையில் உதவிகளை கோரக்கூடிய அனைத்து அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் அவ்வாறான ஏனைய நபர்களினால் அப்பணிகள் தொடர்பில் உரியவாறு பின்பற்றக் கூடிய ஆலோசனைகளுக்கமைவாக செயற்பட வேண்டுமென்பதனாலும் வழங்கக் கூடிய அனைத்து உதவிகளையும் வழங்க வேண்டுமென்பதனாலும், வழங்கக் கூடிய அனைத்து தகவல்களையும் வழங்க வேண்டுமென்பதனாலும் நான் இத்தால் அனைத்து அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும், ஏனையோருக்கும் பணித்து கட்டளையிடுகிறேன்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் 33 ஆவது சரத்திற்கமைய இரண்டாயிரத்து பத்தொன்பதாம் ஆண்டு மாச்சு மாதம் 18 ஆந் திகதி சனாபதியின் கட்டளை மற்றும் அதற்கு இடைக்கிடையே மேற்கொள்ளப்பட்ட மறுசீரமைப்புக்கள் மூலம் தாபிக்கப்பட்ட தேசிய சம்பளம் மற்றும் ஊழியர் எண்ணிக்கை ஆணைக்குழுவினை இத்தால் இரத்துச் செய்கிறேன்.

இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரச இலட்சனையின் கீழ் இரண்டாயிரத்து இருபதாம் ஆண்டு பெப்ருவரி மாதம் 14 ஆந் திகதி கொழும்பில் வழங்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

பீ. பி. ஜயசுந்தர,
சனாதிபதியின் செயலாளர்.

2-671